ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2188/48 - 2020 අගෝස්තු මස 14 වැනි සිකුරාදා - 2020.08.14

*2188/48 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### பெந்தோட்டை பிரதேச சபை

களியாட்ட வரி

(267 ஆம் அதிகாரமாகிய) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக காலி மாவட்டத்தில் பெந்தோட்டை பிரதேச சபையினால் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 5.6.2 (x) இன்கீழ் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இணைப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் வாசிக்க வேண்டிய களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவில் (2) ஆம் உப பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக தென் மாகாணத்தில் ஆளுநர் வில்லியம் விஜேசிங்க கமகே ஹேமால் குணசேகர விக்கிரமரத்ன ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் தயவுடன் அறியத்தருகின்றேன்.

**வில்லியம் விஜேசிங்க கமகே,**
தென் மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
காலி,
2020, பெப்புருவரி 25.

1A - PG 5092 — 22 (2020/08)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**தீர்மானம்**

*(267 ஆம் அதிகாரமாகிய) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக காலி மாவட்டத்தில் பெந்தோட்டை பிரதேச சபை, சபையின் நிர்வாகப் பரப்பு எல்லையினுள் உள்ளடங்கியுள்ள பிரதேசத்தில் நடாத்தப்படும் மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவது களியாட்ட நடவடிக்கைகளுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவில் நூற்றுக்கு பத்து சதவீதத்திற்கு (10%) சமமான பணத்தினை வரியாக அறவிட வேண்டும் எனவும் இத்தீர்மானம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே மேலே அறவிடப்பட்ட களியாட்ட வரியினை அந்தக் களியாட்ட செயற்பாட்டினை களியாட்டத் திகதிக்கு முன்னர் உரிய ஏற்பாட்டாளர்கள் அல்லது ஏற்பாட்டாளர்களினால் உரியவாறு பெந்தோட்டை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டியதென்பதையும் பெந்தோட்டை பிரதேச சபை இத்தால் தீர்மானிக்கின்றது.*

*08-632*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.